2001 மே 29]

கடல் பகுதியில் (Territorial Waters) மீன்வளத்தைப் பாதுகாக்கும் நோக்குடன் தடை செய்யப்படுவது குறித்து கால்நடை பராமரிப்பு மற்றும் மீனளத் துறையின் 25-3-2000 ஆம் நாளிட்ட 40 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1983) 26(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் உரையாற்றும்போது பின்பற்றவேண்டிய ஒழுங்குமுறை பற்றிய புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

2. 2001 ஆம் ஆண்டு மே திங்கள் 25 ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

3. 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 74/1956) கீழ் வணிக வரிகள் துறையின் 2-6-2000 ஆம் நாளன்று உருவாகி, 2-6-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட மிமி(1)வ.வ./45, (தீ.3)/2000 ஆம் எண்ணுள்ள அறிவிக்கையில் திருத்தம் செய்துள்ளது குறித்து வணிக வரிகள் துறையின் 6-12-2000 ஆம் நாளிட்ட 182 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

***

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS